முதன்மை மாவட்ட நீதிமன்றம், தஞ்சாவூர்

SMOP 178/2023

மனுதாரர் தரப்பு 1 வது சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு திரு. அ.கஜேந்திரன், கிரேடு -1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அஸ்லீனா பர்ஹானா | வயது | : | 28 |
| தந்தை பெயர் | : | சகாபுதீன் | தாலுக்கா | : | கும்பகோணம் |
| கிராமம் | : | கும்பகோணம் | தொழில் | : | வீட்டுகுடித்தனம் |

நாள் :07.03.2026

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

1) எதிர்மனுதாரர் இந்து என்று தெரிந்துதான் காதல் திருமணம் செய்துகொண்டேன் என்றால் சரிதான்.

2) திருமணத்திற்கு முன்பு 5 வருடங்களாக காதலித்தோம் என்றால் இல்லை.

3) எதிர்மனுதாரரை நான் பள்ளிக்கு போகும்போது பார்த்துள்ளேன். அப்போது நான் 12ம் வகுப்பு படித்து கொண்டிருந்தேன். அப்போது எதிர்மனுதாரர் கார் டிரைவராக இருந்தார்.

4) நான் பள்ளிவேனில்தான் பள்ளிக்கு சென்று வருவேன். எதிர்மனுதாரர் அந்த பள்ளியில் வேறு ஒரு வேனின் டிரைவராக இருந்தார்.

5) நான்தான் எதிர்மனுதாரரிடம் போன் நம்பர் வாங்கி அவரிடம் என் காதலை தெரிவித்தேன் என்றால் இல்லை. அவர்தான் தெரிவித்தார். அவர் விருப்பப்பட்டபிறகு நானும் காதலித்தேன் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் எனக்கு வயது 18 பூர்த்தி ஆகவில்லை என்றால் சரிதான்.

6) நான் கல்லூரி படிப்பை பெரியார் மணியம்மை கல்லூரியில் படித்தேன். இரண்டாம் வருடம் படித்தபோது நான் திருமணம் செய்துகொண்டேன் என்றால் சரிதான்.

7) எதிர்மனுதாரர் வெளியூரில் வேலை பார்த்தபோது அவருக்கு போன் செய்து எனக்கு 18 வயது ஆகிவிட்டது எனக்கு வேறு ஒருவருக்கு திருமணம் செய்து வைத்துவிடுவார்கள்

வந்து என்னை திருமணம் செய்துகொள்ளுங்கள் என்று நான் சொன்னேன் என்றால் சரியல்ல.

8) எதிர்மனுதாரர் என்னைஅழைத்துகொண்டுபோனபோது நான் விரும்பிதான் சென்றேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் என் கணவர் வெளிநாட்டில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான்.

9) என்னுடைய வீட்டில் இருந்து போலிசில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நாங்கள்தான் காவல்நிலையம் சென்றோம்.

10) காவல்நிலையத்தில் என்னை விசாரித்துவிட்டு பெற்றோருடன் போக சம்மதிக்காமல் எதிர்மனுதாரருடன் போய்விட்டேன் என்றால் சரிதான்.

11) 3.4.2017 அன்று எங்களுக்கு திருமணம் ஆனது. அதில் இருந்து குழந்தை பிறக்கும் வரை எதிர்மனுதாரரோடுதான் இருந்தேன் என்றால் சரிதான்.

12) எதிர்மனுதாரருக்கு நிறைய பெண்களோடு தொடர்பு மற்றும் குடித்துவிட்டு வந்து என்னை அடிப்பார் என்றுதான் விவகாரத்து மனு தாக்கல் செய்தேன். அவ்வாறு அந்த பெண்களில் ஒருவர் பெயர் என்னால் சொல்லமுடியுமா என்றால் கோமதி என்ற ஒரு பெண் உள்ளார். இந்த மனுவில் அந்த கோமதியின் பெயரை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இதை நிருபிக்க ஆவணம் தாக்க செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

13) நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

14) எதிர்மனுதாரர் என்னை குடித்துவிட்டு அடித்தார் என்பதற்கு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. சமூகநலதுறையில் புகார் கொடுததேனா என்றால் இல்லை.

15) இந்துமுறை படி தாலி அணிந்துதான் திருமணம் செய்துகொண்டேன் என்றால் சரிதான். தற்போது அந்த தாலி அணியவில்லை. 2022ம் ஆண்டு அவர் வீட்டில் இருந்து வெளியே வரும் போது தாலியை கழட்டி கொடுத்துவிட்டு வந்தேன்.

16) எனக்கு மதம்தான் பிரச்சினை என்றும் அதனால்தான் தாலியை கழட்டி கொடுத்துவிட்டுபோனேன் என்று சொன்னால்சரியல்ல. 4- ½ ஆண்டுகள் கழித்துதான் நான் கர்ப்பம் அடைந்தேன் என்றால் சரிதான்.

17) எனக்கு கர்ப்பபையில் கோளாறு இருந்தது என்றும் அதற்காக சிகிச்சை பெற்றபிறகுதான் 4- ½ ஆண்டுகள் கழித்து கருவுற்றேன் என்றால் சரியல்ல.

18) எம்.சி வழக்கு நான் எதுவும் போடவில்லை என்றால் சரிதான்.

19) குடும்ப வன்முறை வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

20) எதிர்மனுதாரர் உண்மையிலேயே என்னை கொடுமை படுத்தியிருந்தால் எம்.சி வழக்கு. குடும்ப வன்முறை வழக்கு போட்டு இருப்பேன் என்றால் சரியல்ல. எனக்கு மதம்தான் பிரச்சினை என்றால் சரியல்ல. குழந்தை 2022ம் ஆண்டு பிறந்தது.

21) மகப்பேறு பார்த்தது எதிர்மனுதாரர் என்றால் அவர் அம்மா பார்த்தார்கள். அதற்கு பிறகு 3 மாதங்கள் அவர்கள் வீட்டில்தான் இருந்தேன் என்றால் சரிதான்.

22) நான் எதிர்மனுதாரரை மதம் மாற சொல்லி கேட்டேன் என்றும் ஜமாத்தில் வந்து நின்றால் மட்டும் போதும் என்றும் சுன்னத் கூட செய்யவேண்டாம் என்று சொன்னேன் என்றால் சரியல்ல.

23) குழந்தைக்கு பெயர் வைக்கும்போது எதிர்மனுதாரரிடம் தெரிவித்தேனா என்றால் இல்லை. அர்ஸ்பர்கான் என்ற பெயர் வைத்தோம். குழந்தைக்கு பெயர் வைத்ததையே எதிர்மனுதாரரிடம் சொல்லவில்லை என்றும் எனக்கு மத பிரச்சினைதான் என்று சொன்னால் சரியல்ல.

24)தற்போது நீதிமன்றத்திற்கு என் தந்தையுடன் வந்துள்ளேன் என்றால் சரிதான்.

25) குழந்தை அர்ஸ்பர்கான் அவருடைய தந்தையான எதிர்மனுதாரருடன்தான் இருக்கவேண்டும் என்றும் நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

25) நான் மறுமணம் செய்து கொண்டால் குழந்தையின் உடல்நலம் மற்றும் மனநலம் பாதிக்கப்படும் என்றும் அதனால் இந்த மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

26) எதிர்மனுதாரர் என்னுடைய நலன் கருதியும் குழந்தையின் நலன் கருதியும் ஜமாத்தில் வந்து நிற்கிறேன் என்று சொன்னால் நான் ஒத்துக்கொள்ளமாட்டேன்.

மறு விசாரணை

இல்லை.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.03.07 16:39:17 +0530